Registered as a Newspaper
பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 335
சனிக்கிழமை
26 ஒக்ரோபர் 2024
ஐப்பசி 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு

**முச்சந்தி முரளி**



"அப்ப அநுரவும் இனிமேல் உந்தச் சதியளைக் கண்டுபிடிக்கிறதிலையே காலத்தைப் போக்காட்டப் போறார் போல"






## உறவுகளுக்கு என்ன நடந்தது? அறிவதற்கு உரிமை உள்ளது

### போராட்டத்துக்கு ஜூலி சங் ஆதரவு

மன்னார், ஒக். 26
வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது? என்று அறிவதற்கான உரிமை அவர்களைச் சார்ந்த உறவினர்களுக்கு உள்ளது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். வடமாகாணத்துக்கு உத்தியோகபூர்வ பயணம் ☞11

## காணாமலாக்கப்பட்டோருக்காக கிளிநொச்சியிலும் போராட்டம்!

கிளிநொச்சி, ஒக். 26
காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரி கிளிநொச்சியில் நேற்றுப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்ட இந்தப் போராட்டத்தின்போது, காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்றும், காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் சர்வதேச விசாரணையே தேவை எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-ம-113)

### ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றோர்

# பொய்களைக் கட்டமைத்து ஆட்சியைப் பிடிக்கச் சதி!

### ஜனாதிபதி அநுர குற்றச்சாட்டு



**கொழும்பு, ஒக்ரோபர் 26**
**ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தவர்கள், கட்டுக்கதைகள் மூலம் தேவையற்ற பதற்றங்களை ஏற்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றச் சதியில் ஈடுபட்டுள்ளனர் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.** ☞11

## இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக். 26
நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 16 இந்திய மீனவர்களும் அடுத்த மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ☞08




### 34 வருடங்களின் பின்னர்

## சொந்தமண்ணில் காங்கேசன்துறை அஞ்சலகம்!

யாழ்ப்பாணம், ஒக். 26
காங்கேசன்துறை அஞ்சல் அலுவலகம் சுமார் 34 வருடங்களின் பின்னர் மீண்டும் காங்கேசன்துறையில் இயங்க ஆரம்பித்துள்ளது. ☞11

## மின்கட்டணத் திருத்தம் யோசனை கையளிப்பு!

கொழும்பு, ஒக். 26
தற்போது நடைமுறையிலுள்ள விலைச் சூத்திரத்துக்கு அமைவாக மின்கட்டணத் திருத்தம் தொடர்பான யோசனையொன்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது. குறித்த யோசனையைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு ஆராய்ந்து அனுமதியளிக்கும் பட்சத்தில் மின்கட்டணத்தைக் குறைப்பது ☞11

### 29ஆம் திகதி வரை

## வடக்கில் கனமழை

யாழ்ப்பாணம், ஒக். 26
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைக்கும் மழை எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தொடரும் வாய்ப்புள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், ☞08

## சீர்திருத்த நடைமுறைகள் இலங்கை முன்னேற்றம்!

### நாணயநிதியம் தகவல்

விரிவு :- பக். 07

## திடீர் சுகவீனம் இளைஞர் பலி!



யாழ்ப்பாணம், ஒக். 26
திடீர் சுகவீனமுற்ற இளைஞரொருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையின் போது நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் - வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த ம.சுசிகரன் (வயது -35) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். ☞11

## கல்விக்குச் செலவிடும் தொகை இலங்கையில் மிகவும் குறைவு!

கொழும்பு, ஒக். 26
கல்விக்காக மிகக்குறைந்தளவு தொகையைச் செலவிடும் நாடுகளின் பட்டியலில் இலங்கை மூன்றாவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.
ஒரு காலத்தில் தெற்காசியாவில் மிக அதிகளவான கற்றறிந்தோர் சராசரியைக் கொண்டிருந்த இலங்கை, தற்போது கல்விக்காக மிகக்குறைந்தளவு தொகையைச் செலவழிக்கும் நாடாக சர்வதேசத்தில் பெயரெடுத்துள்ளது. ☞11

## போஸ்டர் ஒட்டியவர் மின்தாக்கி இறப்பு!

முல்லைத்தீவு, ஒக். 26
முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட முத்து விநாயகபுரம் பகுதியில் கட்சி ஒன்றின் தேர்தல் பரப்புரை போஸ்டரை ஒட்டும்போது ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். ☞11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்சாட்டெனில் நிரூபியுங்கள்!

## விஜித ஹேரத்துக்கு கம்மன்பில சவால்

கொழும்பு, ஒக். 26

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய ஓய்வுநிலை நீதிபதி அல்விஸ், குற்றவாளியென கூறப்படும் வழக்குத் தீர்ப்பை 7 நாள்களுக்குள் பகிரங்கப்படுத்தவும். அவ்வாறு இல்லையேல் பொதுமக்களிடம் மன்னிப்புக் கோரவும். -இவ்வாறு அமைச்சர் விஜித ஹேரத்துக்கு சவால் விடுத்துள்ளார் பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில.

இலத்திரனியல் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பில் கம்மன்பில தெரிவித்ததாவது;

அறிக்கையை ஏற்பதற்கும், நிராகரிப்பதற்கும் பேராயருக்கு நீதிமன்ற அதிகாரம் வழங்கப்படவில்லை. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தினத்தன்று எட்டுக் குண்டுகள் வெடித்தன. அவற்றில் இரண்டுதான் கத்தோலிக்க தேவாலயங்களில் வெடித்தன. உயிரிழந்தவர்களுள் அனைவரும் கத்தோலிக்கர்கள் அல்லர். எனவே, இது தேசிய பிரச்சினையாகும். ஓய்வுநிலை நீதிபதி அல்விஸ் தலைமையில் குழு அமைக்கப்பட்டவேளை அதற்கு விஜித ஹேரத் தரப்பு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. தமது அரசியல் சகாக்கள் குற்றவாளிகளாக்கப்பட்டுள்ளதால்தான், ஓய்வுநிலை நீதிபதி அல்விஸ் தவறானவர் என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

நீதிபதி அல்விஸ் குற்றவாளியென கூறப்படும் தீர்ப்பை பகிரங்கப்படுத்துமாறு விஜித ஹேரத்துக்கு சவால் விடுக்கின்றேன். இதற்காக 7 நாள்கள் வழங்குகின்றேன். ஒன்று வெளியிட வேண்டும். அவ்வாறு இல்லையேல் மக்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும்- என்றார் கம்மன்பில. (ஒ-இ)

### கமலா ஹாரிஸை

# அமெரிக்கத் தமிழர் ஆதரிக்கவேண்டும்

வவுனியா, ஒக். 26

அமெரிக்காவில் வசிக்கும் தமிழ் மக்கள் கமலா ஹாரிஸுக்கு வாக்களித்து எங்கள் இறையாண்மையை மீட்டு எங்கள் காணாமற் போன குழந்தைகளை கண்டுபிடிக்க உதவவேண்டும் என தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினர். (ஒ-110)



# பரந்தனில் டெங்கு ஒழிப்பு

கிளிநொச்சி, ஒக்.26

கிளிநொச்சி மாவட்டத் தொற்றுநோய் பிரிவினரின் ஏற்பாட்டில் பரந்தன் பகுதியில் டெங்கு நோய் பரவும் சூழலை இனங்கண்டு டெங்கு நோய் பரப்பும் நுளம்புகளை இனங்காணும் நடவடிக்கை மாவட்ட தொற்றுநோய் பிரிவு மருத்துவர் க.ரஞ்சன் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பொதுச்சுகாதார பரிசோதகர்கள், தொற்றுநோய் பிரிவின் சுகாதார உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி-113,27)

# விசாரணை அறிக்கைகள் அரசியல் ஆதாயமற்றவை

## ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 26

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் அறிக்கைகளை அரசியல்மயப்படுத்தவேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விசேட அறிக்கையொன்றை விடுத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அல்விஸ் அறிக்கை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் தற்போதைய செயலாளர் ரவி செனிவிரட்ணவையோ அல்லது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் இயக்குநர் ஷானி அபயசேகரவையோ பழிவாங்கும் நோக்கில் தயாரிக்கப்படவில்லை .

ஜனாதிபதித் தேர்தலின்போதே அந்த அறிக்கை எனக்குக் கிடைத்தது. எனினும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை அரசியலுடன் தொடர்புபடுத்தும் விருப்பம் இல்லாததால் நான் அறிக்கையைப் பகிரங்கப்படுத்தவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)


பாராளுமன்ற தேர்தல் - 2024
யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
களத்தில் கமல்
1. தலைமைத்துவம்
▸ கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தின்
▸ தலைவர் - 2014/15
▸ உபதலைவர் - 2012/13
▸ இலங்கை சட்ட மாணவர் சங்கம்
▸ உபதலைவர் - 2015/16
▸ கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் மற்றும் இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட கல்வி தொடர்பான பாசறைகளில் தொடர்ந்து பங்காற்றியமை.
▸ சர்வதேச நிறுவனத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கில் காணப்படும் பாடசாலைகளின் அபிவிருத்தி செயல்திட்டங்களுக்கு ஆலோசகராக செயற்பட்டமை.
▸ பல்வேறு மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்காக, சர்வதேச நிறுவனத்தின் ஊடாக நடாத்தப்பட்ட 6 மாத கால தலைமைத்துவப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றமை.
2. முயற்சியாண்மை
▸ YAARL FITNESS - 2016 (யாழ் உடற்பயிற்சி நிலையம்)
YAARL HOSTELS - 2018 (யாழ் சுற்றுலா விடுதி)
▸ SINGAI RESTAURANT - 2024 (சிங்கை உணவகம்)
3. கல்வி
▸ Attorney - at - law இலங்கைச் சட்டக் கல்லூரி
▸ LL.B (Hons) - APIIT, கொழும்பு
▸ B.A (Economics) - கொழும்புப் பல்கலைக்கழகம் (பொருளியல், அரசியல் விஞ்ஞானம், சர்வதேச உறவுகள்)
▸ க.பொ.த உயர் தரம் - கொழும்பு இந்துக்கல்லூரி (பொருளியல், அரசியல் விஞ்ஞானம், அளவையியலும் விஞ்ஞானமுறையும்)
▸ க.பொ.த சாதாரண தரம் வரை - யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி
4. விளையாட்டு
▸ உதை பந்தாட்டம்
▸ கொழும்புப் பல்கலைக்கழக அணியின் உபதலைவர் - 2014/15
▸ இலங்கைப் பல்கலைக்கழக (SLUSA) Colours விருது - 2012, 2013, 2014
▸ படகோட்டம் (Rowing)
▸ கொழும்புப் பல்கலைக்கழக Colours விருது - 2013
▸ பாடசாலையிலும் பல்கலைக்கழகத்திலும் சகலதுறை விளையாட்டு வீரராகத் திகழ்ந்தமை.
5. கலைத்துறை - இயக்குநர்
▸ குறும்படம் - " அக (தி) ", " பட்டம் 2 பட்டம் "
▸ பாடல்கள் - " கனவா நனவா... ", " ஷண்முக நாமமே... ", " (மு)த்த மொழியின் முதல்வன்... "




மாற்றத்திற்கான நம்பிக்கை...



சுயேச்சைக் குழு - 2
ஊஞ்சல் சின்னம்



4
E.S.P நாகரத்தினம் கமலரூபன்
சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்
LL.B (Hons, BA (Economics) (University of Colombo)

# மாற்றத்தை நடைமுறையில் உருவாக்கவேண்டும்

## சந்திரகுமார் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக். 26


ஆட்சியாளர்கள் அதிகாரத்துக்கு வர முன் பேசுவதும் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின் செயற்படுவதும் வேறாக இருக்கும் என்பதை நாம் நன்றாக அறிவோம். மாற்றத்தை விரும்புவோராக இருப்பின் அந்த மாற்றத்தை நடைமுறையில் உருவாக்க வேண்டும்.

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்., கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தின் முதன்மை வேட்பாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பல்லினச் சமூகங்களின் இருப்பையும் அடையாளத்தையும் அழிப்பதையோ, மீறுவதையோ ஏற்கமுடியாது.

தமிழ்பேசும் சமூகத்தை அரசியல் அநாதைகளாக்குவற்கான முயற்சிகள் நடக்கின்றன. இதனால் தமிழ்பேசும் சமூகங்கள் பாதிக்கப்படும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது. இதனை நாம் அனுமதிக்கவே முடியாது. எந்த மாற்றமும் தனியொரு இனத்தின் நலனை மட்டும் முதன்மைப்படுத்தி நடப்பது பொருத்தமானதல்ல. வெறும் அறிக்கை அரசியலை நாம் செய்யவில்லை. நாடாளுமன்றத்தில் உணர்ச்சி பேச்சுகளை பேசும் அரசியலையும் நாம் மேற்கொள்ளவில்லை- என்றார். (ஒ-214)

நாடாளுமன்றத் தேர்தல் - 2024
சனநாயக தமிழரசு கூட்டமைப்பு



X 2
சுயேட்சை குழு - 14
மாற்றத்தின் விதை மாம்பழம்



ஈஸ்வரபாதம் சரவணபவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











தபால்மூல வாக்களிப்பு:

# அலுவலர்களுடன் கலந்துரையாடல்!





நாடாளுமன்றத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்பில் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களாகப் பணியாற்றவுள்ளவர்களுடனான கலந்துரையாடலானது யாழ்ப்பாண மாவட்ட பதில் மாவட்டச் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

தபால் மூல வாக்களிப்பானது, மாவட்டச் செயலகம், பொலிஸ் மற்றும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் ஆகியவற்றில் கடமையாற்றுபவர்களுக்கு எதிர்வரும் 30 ஆம் திகதியும் மற்றும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

பாதுகாப்புப் படைகள் மற்றும் பிற அரச நிறுவனங்களில் கடமையாற்றுபவர்களுக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 1 ஆம் திகதியும் மற்றும் 4 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

மேற்குறித்த திகதிகளில் வாக்களிக்கத் தவறியவர்கள் மீள வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் மாவட்டச் செயலகத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதியும் மற்றும் 8 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. மேலும் இவ் தபால் மூல வாக்களிப்புக் கடமைக்காக நியமிக்கப்பட்ட அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் தபால் மூல வாக்களிப்பை ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்கள் போலவே செய்றபட்டு, இட ஒழுங்கமைப்பு, முகவர்களுக்குரிய ஏற்பாடுகள் போன்றவற்றை முறையாக நடைமுறைப்படுத்தி ஒத்துழைக்கவேண்டும் என தெரிவத்தாட்சி அலுவலர் கேட்டுக்கொண்டார். (ஒ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமை அமைதி விருதுகள் பொது அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக்.26

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் நடத்தப்படும் பசுமை அமைதி விருதுகள்2024 இணையவழிச்சூழல் பொது அறிவுப் பரீட்சை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7மணி தொடக்கம் இரவு 8.30 மணி வரை இடம்பெறவுள்ளது. நூறு பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாக இப் பரீட்சை நடைபெறும். (ரி-66)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக்.26

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு 2024 ஆம் ஆண்டு தோற்றவுள்ள கணித மற்றும் உயிரியல் விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான உதவிக் கருத்தரங்கு யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு நாள்கள் காலை 8 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், தேர்ச்சி பெற்ற பிரபல பாடசாலைகளின் ஆசிரியர்கள் வளவாளர்களாக கலந்து கொள்ளவுள்ளதுடன், மாணவர்களுக்கு சிற்றுண்டிகள் மற்றும் மதிய உணவும் மாணவர் ஒன்றியத்தால் வழங்கப்படவுள்ளது. இரண்டாம் மற்றும் மூன்றாம் தடவைகள் பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளும் கருத்தமர்வில் பங்குபற்ற முடியும் என்பதோடு, வெளிமாவட்டங்களிலிருந்து பங்குபற்றும் முன்பதிவு செய்த மாணவர்களுக்கு போக்குவரத்துக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். கருத்தமர்வில் பங்குகொள்ளும் மாணவர்கள் வழங்கப்பட்ட கியூ.ஆர்.கோட் இனை ஸ்கான் செய்வதனூடாக அல்லது வழங்கப்பட்ட மின்னியல் இணைப்பினூடாக முன்பதிவு செய்து கொள்ளுமாறு விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-45)

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சுசிலாதேவி தில்லைவனராசா

திதி - 26.10.2024 (தேய்பிறை தசமி)

ஈராண்டு நகர்ந்தாலும்
அகலாது உம் நினைவு
நினைவுகளைச் சுமந்து
நிலை குலைந்து போகின்றோம்
அம்மா
அன்னையின் ஆத்மா சாந்தி
அடைய இறைவனைப்
பிரார்த்திப்போம்
ஓம் சாந்தி .. ஓம் சாந்தி .. ஓம் சாந்தி

தோற்றம் 07.05.1951

மறைவு 20.10.2022

கேணியடி,
மீசாலை மேற்கு,
மீசாலை

தகவல்
குடும்பத்தினர்

(CS 1698) P-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 05 . 1948



மறைவு 24 . 10 . 2024

சிவசுப்பிரமணியம் பத்மாவதி

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் பத்மாவதி நேற்று முன்தினம் (24.10.2024) வியாழக்கிழமை கொழும்பில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தங்கம்மா தம்பதியின் பாசமுள்ள மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - நாகம்மா தம்பதியின் மருமகளும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சோதிமலர், மற்றும் விமலநாதன், சுரேஸ், காலஞ்சென்ற ரமேஸ், ஜீவமலர், கோனேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ராதிகா, கலாவதி, தயாளன், ரேணுகா ஆகியோரின் பாசமுள்ள மாமியும், விதுர்ஷன், நிருஜன், லக்சிகா, தேனுஜன், வர்ணிகா, தர்மிதன், துவிஸ்கா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை உடுப்பிட்டியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணிக்கு வல்லை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
கோனேஸ்வரன் (மகன்)
077 175 2611

(CR/43480) J-1

# விசேட கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஒக்.26

யாழ்.குடாநாட்டில் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான விசேட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாதாந்த ஊக்குவிப்பு, வாழ்க்கைச் செலவு, கடந்த கால விடுமுறைக் கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகளே முற்கூட்டியே வழங்கப்பட்டு வருகின்றன என்றும் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-45-17)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். காரியம் அனுகூலமாக முடியும். திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும். சிலருக்கு குடும்பம் தொடர்பான வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடலாம்.

**இடபம்:** காரிய அனுகூலமும் உண்டாகும். சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகளும் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளை மட்டும் தவிர்க்கவும். அலுவலகத்தில் பணிச்சுமை குறைவதால் உற்சாகமாகக் காணப்படுவீர்கள்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். ஆதாயம் உண்டாகும். வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும். சோர்வு நீங்கி உற்சாகம் பெறுவீர்கள்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறை வேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக செலவு செய்வீர்கள்.

**சிம்மம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். நண்பர்கள் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். முக்கியப் பிரமுகர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். நல்லதகவல் இன்று கிடைக்க வாய்ப்பு உண்டு. ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விடயமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிறு சிறு விவாதங்கள் ஏற்படக்கூடும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்** : புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். உறவினர்கள் வருகையால் வீட்டில் பிரச்சினை ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் கிடைக்கும்.

**தனுசு:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் சிறு தடை ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். கருத்துவேறுபாடுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. செலவுகள் ஏற்படும். பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு.

**மகரம்:** வழக்கமான பணிகளில் மட்டும் ஈடுபடவும். தந்தை வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படக்கூடும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. உங்கள் முன்னேற்றத்துக்கு உதவுவதாக இருக்கும். உற்சாகம் ஏற்படும்.

**கும்பம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவு செய்யவேண்டி இருக்கும். எதிர்பார்த்ததை விட அதிகமாக இருப்பது உற்சாகம் தரும். அலுவலகத்தில் சக ஊழியர்களின் விடயத்தில் தலையிடவேண்டாம்.

**மீனம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். புதிய முயற்சிகளை யோசித்து எடுப்பது நல்லது. கடன்கள் விஷயத்தில் சற்று எச்சரிக்கையாக இருக்கவும். செலவுகள் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்பெயருக்குக் களங்கம்; என்னை கொன்றுவிடுங்கள்

## ரோஹித ஆதங்கம்

கொழும்பு, ஒக்.26
தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதை விட தம்மை கொலை செய்வதே மேல் என ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார். சேறு பூசும் பிரசாரங்கள் மூலம் எம்மை வீழ்த்துவது எளிதல்ல. எம்மை வெறுப்பவர்கள், சேறு பூசி தமது நற்பெயரைக் கெடுக்காமல், பல தலைவர்களை சுட்டுக் கொன்றதைப்போன்று எமது வாழ்க்கையையும் அழித்துவிடவேண்டும்.
தேசத்துக்காகவும் அரசியலுக்காகவும் தனது உயிரை தியாகம் செய்ய தயார். இது சேறு பூசுவதை விட சிறந்தது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)






## வலிகாமம் மேற்கு பண்பாட்டு பெருவிழா

யாழ்ப்பாணம், ஒக்.26
வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம் மற்றும் வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் பண்பாட்டுப் பெருவிழா சங்கானை கலாசார மத்திய நிலையத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் திருமதி கவிதா உதயகுமார் தலைமையில் நடைபெற்ற விழாவில் பிரதம அதிதியாக யாழ். மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (ச-25,27)



## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.26
இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர்களான கலாநிதி ஜெகன் குணதிலக, பேராசிரியர் பாத்திமா பர்ஷானா ஹனீபா ஆகியோர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலக இணைப்பாளர், மாவட்ட சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர். (ச-25, 113)



பாராளுமன்றத் தேர்தல் - 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்





அன்புக்குரிய மக்களே!

எந்தக் களத்திலும் விலைபோகாது சலுகைகளுக்கு அடிபணியாது தடம்மாறாது தமிழ்த் தேசியத்தின் பாதையில் பயணிப்பேன் என்ற உத்தரவாதத்தை வழங்கி,

ஒற்றையாட்சியை நிராகரிக்கும் ஒற்றைத் தலைமையான **கஜேந்திரகுமார்** பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் **சைக்கிள் (🚲) சின்னத்தில் முதலாம் (1)** இலக்கத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடுகின்றேன் என்ற தகவலை உத்தியோகபூர்வமாக அறியத்தருகின்றேன்.

நீங்கள் எனக்கு அங்கீகாரம் தந்தால் தமிழினத்தின் விடுதலைசார் - உரிமைசார் அரசியலுக்கு முதலிடம் வழங்குவதோடு, தமிழ்த் தேசத்தின் தற்சார்புப் பொருளாதாரத்திற்கு வலுச்சேர்த்து, மாவீரர் குடும்பங்களுக்கும் அங்கவீனமுற்ற முன்னாள் போராளிகளுக்கும் முன்னுரிமை வழங்கி, ஒட்டு மொத்தத் தமிழ்த் தேசத்திலும் வறுமை என்பது மாணவர்களின் கல்வி - விளையாட்டு - போஷாக்கு ஆகியவற்றுக்குத் தடையாக அமையக் கூடாது என்பதன் அடிப்படையில் அதியுச்ச நேர்மையோடு செயற்படுவேன் என்ற உத்தரவாதத்தை இத்தால் வழங்கி நிற்கின்றேன்.



அன்புரிமையுடன்,

கனகரட்ணம்
**சுகாஷ்**
(சட்டத்தரணி)

🚲 X 1

**இலக்கு ஒன்றே இனத்தின் விடுதலை!**

# குடும்பவன்முறையால் 350 பெண்கள் சாவு

கொழும்பு, ஒக். 25
கடந்த நான்கு வருடங்களில் குடும்ப வன்முறைகள் காரணமாக 350 பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர். கணவன், காதலன் போன்றவர்களாலேயே இந்த கொலைச்சம்பங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது தெரிய வந்த விவரங்கள் என மகளிர் சிறுவர் பிரிவு பிரதி பொலிஸ்மா அதிபர் ரேணுகா ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.
அண்மைக்காலத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
2021ஆம் ஆண்டு குடும்ப வன்முறை காரணமாக 82 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 2022 ஆம் ஆண்டு 95 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.
2023ஆம் ஆண்டு 105 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு ஓகஸ்ட் வரை 71 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.
குடும்ப வன்முறைகள் தொடர்பாக ஆண்டுதோறும் சராசரியாக ஒரு இலட்சத்து 30 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகவும் பெரும்பலான சந்தர்ப்பங்களில் உடல் ரீதியான, பாலியல் ரீதியான, உணர்ச்சிகரமான தாக்குதல்கள் கொலையில் முடிவடைவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
குடும்ப வன்முறைகளை எதிர்கொள்ளும் பெண்கள் 109 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாமென மகளிர் சிறுவர் பிரிவு பிரதி பொலிஸ்மா அதிபர் ரேணுகா ஜெயசுந்தர தெரிவித்துள்ளார். (ஒ-6)

# பயணத் தடையல்ல பயண எச்சரிக்கையே

## விஜித ஹேரத் தெளிவுபடுத்தல்



**கொழும்பு, ஒக். 26**
**இலங்கைக்கான பயணத் தடையை அமெரிக்கா விதிக்க வில்லை. பயண எச்சரிக்கை அறிவுறுத்தலே விடுக்கப்பட்டுள்ளது - இவ்வாறு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை அறிவுறுத்தலை அந்நாடுகள் விரைவில் நீக்கிக்கொள்ளும் என்று அமைச்சர் விஜித ஹேரத் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: இச்சம்பவத்தை பயன்படுத்தி எவரும் வீண் அச்சத்தை ஏற்படுத்த முற்படக்கூடாது. அரசியல் ஆதாயம் தேடவும் முற்படக்கூடாது. பொறுப்பான அரசு என்ற அடிப்படையில் தேவையான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மக்களும் கட்டுக்கதைகளை நம்பக்கூடாது. பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் விரைவில் இயல்பு நிலை திரும்பும். பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து வெளிநாட்டு தூதுவர்கள் திருப்தி அடைந்துள்ளனர். நேற்று முன்தினம்கூட இஸ்ரேலியர்கள் வருகை தந்துள்ளனர். அமெரிக்காவால் பயணத் தடை விதிக்கப்படவில்லை. பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது-இவ்வாறு பயண எச்சரிக்கையை விதித்துள்ள நாடுகள் அவற்றை விரைவில் நீக்கும் என நம்புகின்றோம் என்றார். (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைக் கால இடர்களில் பாதுகாத்துக்கொள்ளுங்கள்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.வினோதன் தெரிவிப்பு

**கிளிநொச்சி, ஒக். 26**

**மழைக்காலங்களில் ஏற்படும் இடர்களிலிருந்து மக்கள் தங்களை பாதுகாக்கவேண்டும் என கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.வினோதன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது மழைக் காலம் ஆரம்பித்திருக்கிறது. இதனால் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கக்கூடும். மக்கள் டெங்கு பரவுகின்ற இடங்களை சுத்தமாக வைத்திருக்கவேண்டும். மழைக் காலங்களில் நீர் நிரம்பிய குழிகளில் சிறுபிள்ளைகள் வீழ்ந்து உயிரிழக்கின்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன. எனவே பெற்றோர்கள் அவதானமாக தமது சிறுகுழந்தைகளை பாதுகாக்கவேண்டும். மழைக் காலங்களில் நீரில் மூழ்கி உயிரிழக்கின்ற சம்பவங்களும் அதிகரிக்கின்றன. மழைக் காலங்களில் நீர் நிலைகளில் நீராடுவதைத் தவிர்ப்பது நல்லது. இடி மின்னல் மற்றும் மின்சார தாக்கங்களிலிருந்தும் மக்கள் தங்களை பாதுகாப்பதோடு மழைக் காலங்களில் விஷயந்துகள் வீடுகளை நோக்கி வருவதனால் அதன் பாதிப்பிலிருந்தும் மக்கள் தங்களைப் பாதுகாக்க முன்னேற்பாடுகள் செய்யவேண்டும் - என்றார். (ஓ-113)

# வழிகாட்டிகளாக மாறும் வெளிநாட்டு சுற்றுலாவிகள்

கொழும்பு ஒக்.26

உல்லாசப்பயண வழிகாட்டிகளாக வெளிநாட்டவர்களும் செயற்பட்டு வருவதால் உல்லாசப்பயண வழிகாட்டித் தொழிலை மேற்கொண்டு வருபவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். சீனா, ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து சுற்றுலா விசாவில் வருபவர்கள் இங்கு தங்கியிருந்து கொண்டு தமது விசாவை புதுப்பித்த வண்ணம் உல்லாசப் பயண வழிகாட்டிகளாக செயற்பட்டு வருகின்றனர். இவ்வாறு அனுமதிப்பத்திரமின்றி ஆயிரத்து 460 பேர் உல்லாசப் பயண வழிகாட்டிகளாக செயற்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சீனாவிலிருந்து வரும் உல்லாசப்பயணிகளை, இவர்கள் சீனர்களால் நடத்தப்படும் வர்த்தக நிலையங்களுக்கு அழைத்துச்செல்கின்றனர். சீனர்கள் கொழும்பில் தங்கம் மற்றும் இரத்தினக்கல் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த சட்டவிரோத சுற்றுலா வழிகாட்டிகள் தொடர்பாக இலங்கை உல்லாசப்பிராயண அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென சுற்றுலா ஏற்பாட்டு நிறுவனங்களின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச-25, 6)

# ரயில் மோதி இளைஞன் பலி

கொழும்பு, ஒக்.26

மட்டக்களப்பு, ஏறாவூர் பிரதேசத்தில் ரயில் மோதி இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிப்பயணித்த ரயில் ஏறாவூர் குடியிருப்பு பகுதியில் செல்லும் போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ச)

# 12 பிடியாணைகள் சந்தேகநபர் கைது

கொழும்பு, ஒக்.26

ஜா-எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 12 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்ட சந்தேகநபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பண்டுகாபுர பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

வெலிசர, நீர்கொழும்பு, மதவாச்சி மற்றும் கஹட்டகஸ்திகிலிய ஆகிய நீதிவான் நீதிமன்றங்களால் அவருக்கு எதிராக 12 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. (ச)

# ரஞ்சனுக்கெதிராக மனுத்தாக்கல்

கொழும்பு, ஒக்.26

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பொதுத் தேர்தலில் ரஞ்சன் ராமநாயக்க வேட்பாளராக நிறுத்தப்படுவதற்கு எதிராக கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடும் சுயேச்சைக்குழு உறுப்பினர் ஒருவரினால் உயர்நீதிமன்றில் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ச)

# நாடளாவிய ரீதியில் டிஜிற்றல் கட்டமைப்பு



கொழும்பு, ஒக்.26

பொதுத்துறைக் கட்டமைப்பு வெளிப்படைத்தன்மையுடையதாக இருக்க வேண்டும். அதற்காக பொதுத்துறைக் கட்டமைப்பை டிஜிற்றல் மயப்படுத்தப்பட வேண்டுமென பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். நாட்டின் பொருளாதாரத்தை டிஜிற்றல் மயப்படுத்துவதே எமது இலக்கு. நாங்கள் யாழ்ப்பாணம், மாத்தறை, கிழக்கு மாகாணம் போன்ற இடங்களில் சர்வதேச தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து டிஜிற்றல் வலயங்களை உருவாக்கி அதனூடாக புதிய கண்டு பிடிப்பாளர்களை ஊக்குவிக்கவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-25-6)




பட்சி நேற்றுக் கொளுத்திப் போட்ட நெருப்பு எங்க பத்தி எரியவேணுமோ அங்க எரியத் தொடங்கிட்டுது. அவைதான் நேற்றுச் சொன்ன அந்த 'விபசாரக் கண்காட்சியை' நடத்தி வித்தை காட்டின என்.ஜி.ஓ.க்காரர். தங்கட உழைப்பில மண் விழுந்தால் அவையள் 'குய்யோ முய்யோ' எண்டு கத்தத்தானே செய்வினம். எண்டாலும் அவை வல்லமை உள்ளவை. இப்பிடி இன்னொரு புரெஜெக்ட் எழுதி, வேறயொரு கண்காட்சி வைச்சுப் பிழைச்சுக் கொள்ளுவினம். இப்ப அவை என்னெண்டால் 'பட்சிக்கு எதிரா ஆர்ப்பாட்டம் செய்ய வேணும், பட்சியை மன்னிப்புக் கேக்க வைக்கவேணும்' என்டெல்லாம் தங்கட வட்ஸப் குரூப்பில ஒரே ஒப்பாரியாம். ஆனால் அதுக்குமுதல் உவையின்ர கண்காட்சியைப் பார்த்த குற்றத்துக்காக அமெரிக்கத் தூதர் ஜூலி சங்கை நெட்டிசன்கள் வைச்சு கும்மியடிக்கிறதையும், அவா தான் ருவிற்றரில போட்ட பதிவை அழிச்சதையும் பார்க்கிறது நல்லம்.

உந்த 'விபசாரக் கன்றாவியை' ஒழுங்குபடுத்தின என்.ஜி.ஓ.வும், அதுக்கு மூளையா இருக்கிற ஒரு கம்பஸ் லெக்சரரும் உந்தக் கண்காட்சியை அமெரிக்கத் தூதரையும் கூட்டியந்து காட்டியிருக்கினம். அப்பதானே அவையிட்ட புரஜெக்ட் எழுதி காசு வறுகலாம். அதைப் பார்த்திட்டு ஜூலி சங் 'யாழ்ப்பாணத்தில விபசாரம் செய்யிற ஆக்கள் கூடிட்டினம்' எண்ட மாதிரி ருவிற்றரில ஒரு பதிவைப் போட்டிருக்கிறா. அவ்வளவுதான், எல்லாரும் அவாவை மொய்ச்சுப் பிடிச்சு 'உங்கட கண்ணுக்கு உதோ தெரிஞ்சது. அங்க எவ்வளவோ நல்லது இருக்க உந்தக் கண்காட்சியை பார்த்திட்டு பிழையாக் கதைக்க வேண்டாம்' எண்டு பொங்கத் தொடங்கிட்டினம். ஒருகட்டத்தில தான் போட்ட பதிவு பிழையெண்டு ஜூலி சங்க், அதை அழிச்சிட்டாவாம். அதுக்குப் பிறகும் அவா போட்ட பதிவை இன்னொரு ஆள் ஸ்கிரீன் ஷொட் எடுத்து, பேரை அழிச்சுப் போட்டு போட அதுக்கும் அடி விழுகுதாம். ஆனானப்பட்ட அமெரிக்கத் தூதரே இப்பிடி அலறி ஓடேக்க, உந்த 'விபசாரக் கன்றாவிக் கண்காட்சியை' நடத்தின கும்பல் என்ன நியாயம் இருக்கெண்டு மல்லுக்கட்டுகினம் எண்டதுதான் தெரியேலை.

'ஒரு விபசாரியின்ர வலியை வெளியில சொல்றது பிழையோ?' எண்டு அவை கேக்கலாம். சட்டவிரோதமான ஒரு செயலை ஆதரிக்கிற கண்காட்சியை வைச்சு, அதைப் பரப்ப வெளிக்கிட்டவை எண்டு ஆரும் முறைப்பாடு குடுத்தால், உந்தக் கண்காட்சி வைச்சவையின்ர நிலை என்னவாகும் எண்டு ஒருக்கா யோசிச்சுப் பார்த்தினமெண்டால் அவைக்கு உண்மை விளங்கும். அப்பிடியும் விளங்காட்டி, நாளைக்கு இன்னொரு கும்பல் 'போதைப்பொருள் கடத்துபவனின் வலியைப் பேசுவம்', 'பத்துப்பேரை வெட்டிக்கொன்ற மனிதன் சிறையில் படும் வேதனையைப் பாடுவோம்' 'கொள்ளைக்காரனின் தொழிலில் இருக்கும் கஷ்டங்களைச் சொல்லுவோம்' எண்டு ஆளாளுக்கு ஒவ்வொரு புரஜெக்ட் எழுதி, கண்காட்சி வைச்சு, காசு பாக்க வெளிக்கிட்டாலும் அதிசயமில்லைக் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# டெங்கு என்னும் பேராபத்து

வடக்கு மாகாணத்திலும், யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளிலும் டெங்கின் தாக்கம் தலையெடுக்க ஆரம்பித்திருக்கின்றது. யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் மட்டுமல்ல, வடக்கின் பெரும்பாலான பகுதிகளில் கிடைக்கும் டெங்குத் தொற்றுத் தரவுகள் ஆரோக்கியமானவை அல்ல. இந்த மாரிகாலமும் வழக்கமான வெள்ளக்காலங்களைப் போலவே ஆபத்தானது என்ற செய்தியைத்தான் அந்தத் தரவுகள் வலுவாகவே கட்டியம் செய்கின்றன.

வெம்மையின் பூமியான வடக்கு, கிழக்கில் மாரி காலம் மட்டுமே ஒரு வரம். இதமான காலநிலை, பெரும்போக நெற்செய்கை, நிலத்தடி நீருக்கான சேகரம் என்பனவெல்லாம் இந்த மாரிமழை மூலம் கிடைப்பதாலேயே, எஞ்சிய மாதங்களில் வடக்கு - கிழக்கு பகுதிகள் உயிர்பிழைக்க முடிகின்றது. இந்த மாரிமழை இல்லாவிட்டால் தமிழர் தாயகம் பாலைவனமாகியிருக்கும். இப்படி வரமாக வாய்த்த மழை காலம் இப்போது டெங்கு முதலிய நோய்களால் ஆபத்தானதாக மாறியிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் நிலவும் மக்கள் நெருக்கம், சுகாதாரமற்ற பொதுச் சூழல், மாறிப்போன உணவு முறைகள், பெருகி வரும் நோய்கள், அனைவரின் உடலிலும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து வரும் நிலை, மக்கள் நெருக்கத்தால் மாசுபடும் சுற்றுச்சூழல், தேங்கிநிற்கும் தண்ணீர் போன்றவற்றால் மழைக்காலம் என்றாலே ஒருவித எரிச்சல் தோன்றிவிடுகிறது. மழை என்றாலேயே அச்சமும் பதற்றமும் சூழும் அளவுக்கு எங்களின் வாழ்க்கை மாறிப்போய் விட்டது. ஒவ்வொரு பருவகாலத்தின் போதும், ஏராளம் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டாலும் எந்தப் பயனும் இல்லை. வரவேண்டிய மாற்றங்கள் சாத்தியப்பட்டதாயில்லை.

கொரோனா என்பது எவ்வளவு பாரதூரமான உயிர்கொல்லி நோயோ, அதற்கு இம்மியும் குன்றந்ததல்ல டெங்குக்காய்ச்சல். ஆதலால், குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்கள், நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகம் கொண்டிராதவர்கள் பொதுவெளிகளில் அதிகம் நடமாடுவதைத் தவிர்ப்பதோடு, டெங்கு பரவும் ஏதுநிலைகளையும் இல்லாதாக்க வேண்டும். பலவித நோய்களுடன் பலநூறு நோயாளர்கள் மருத்துவமனை வளாகத்துக்குள் தினம்தினம் சென்று திரும்புகின்றனர். பல்வேறு சூழலியல்களுடன் அவர்கள் தொடர்புறுகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில் மருத்துவமனையின் வளாகத்துக்குள் சிறுவர்கள், குழந்தைகளை தேவையற்ற விதமாக அழைத்துச் செல்வதை முற்றாகத் தவிர்த்தல் நலம். எங்கள் ஆரோக்கியத்துக்கு மட்டுமல்ல எங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்துக்கும், உங்களின் சமூகம்சார் ஆரோக்கியத்துக்கும் நீங்களே பொறுப்பாளிகள் என்று ஒவ்வொருவரும் பொறுப்புணரவேண்டும்.

பொதுத்தேர்தல் தொடர்பான கருத்துப் பகிர்வுகள் - ஆரவாரங்களுக்கு மத்தியில், டெங்கின் ஆபத்தான வருகையை எவரும் கண்டுகொண்டதாயில்லை. டெங்குக்கு எதிரான பரப்புரைகள் இம்முறை வெற்றுவறிதாகிப் போயுள்ளன. மலையளவு ஆபத்து தலைமேல் உள்ளது. அதனை அவதானிப்பது காலத்தேவையானது. நாடாளுமன்றத்தைச் சுத்தப்படுத்துவதும், சிரமதானம் செய்வதும் அவசியம்தான். கூடவே எம் சுற்றுப்புறங்களையும் சுத்தப்படுத்தி, சிரமதானம் செய்யலாமே.



# சீர்திருத்த நடைமுறைகள் இலங்கை முன்னேற்றம்!

## நாணயநிதியம் தகவல்

**கொழும்பு, ஒக்.26**

**பொருளாதார சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பணிப்பாளர் கிருஷ்ண ஸ்ரீனிவாசன் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார். அமெரிக்காவின் வொஷிங்டனில் சர்வதேச நாணயநிதியம் மற்றும் உலக வங்கி சந்திப்புகளுடன் இணைந்து நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கையின் விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் மூன்றாவது மதிப்பாய்வை விரைவுபடுத்துவதற்கான வாய்ப்பை உருவாக்கியுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# அவுஸ்திரேலியாவால் கண்காணிப்பு விமானம்

கொழும்பு, ஒக். 26

இலங்கைக்கு கண்காணிப்பு விமானத்தை அவுஸ்திரேலியா இலவசமாக வழங்கியுள்ளது. அவுஸ்திரேலியா இந்த விமானத்தை இலங்கைக்கு வழங்கியமை, இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான கூட்டாண்மையை வலியுறுத்துவதோடு, மனிதக் கடத்தலை தடுப்பதற்கும் பிராந்திய ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கும் கூட்டு அர்ப்பணிப்பை வலுப்படுத்துவதாக இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது. (ச-இ)

# திறைசேரி உண்டியல்கள் ஏலம்

1,45,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் எதிர்வரும் 29ஆம் திகதி ஏலத்துக்கு வரவுள்ளன. 91 நாள்களில் முதிர்ச்சியடையும் 55,000 மில்லியன் ரூபா பெறுமதியான உண்டியல்களும், 182 நாட்களில் முதிர்வடையும் 55,000 மில்லியன் ரூபா பெறுமதியான உண்டியல்களும் இங்கு ஏலம் விடப்படவுள்ளன. (ச)

# தேர்தல் விதிமீறல் இதுவரை 662



கொழும்பு, ஒக்.26

எதிர்வரும் பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை 662 ஆக அதிகரித்துள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 215 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 427 முறைப்பாடுகளும் 15 ஏனைய முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. கடந்த 24 மணி நேரத்தில் 62 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில், தேர்தல் குறித்து ஒரு வன்முறை சம்பவமும் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச)

# சீனக்குழு கைது!

கொழும்பு, ஒக்.26

இணையத்தளம் ஊடாக கணினி குற்றங்களுடன் தொடர்புடைய சீனப் பிரஜைகளின் மற்றுமொரு குழுவினர் காலியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த போது கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 05 கையடக்கத் தொலைபேசிகள், உரிமையாளர் இல்லாத வெளிநாட்டு கடவுச்சீட்டு மற்றும் 4 வங்கி அட்டைகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச)

**நாளை**

**27.10.2024**

ஞாயிற்றுக்கிழமை - ஐப்பசி - 10

சுபநேரம் : 09.03 - 10.33

இராகுகாலம் : 04.33 - 06.03

**நாளொரு நல்வார்த்தை**

**தாய் மொழிகளுக்கு உரிய உன்னத ஸ்தானத்தை கொடுக்காத எந்தக் கல்வித் திட்டமும் கல்விப் பிரச்சினையின் விளிம்பைக் கூடத் தொடத் தகுதியற்றதாகும்.**

*- மகாத்மா காந்தி -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

வானிலையாளருமான நாகமுத்து பிரதீப்ராஜா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. மன்னார் மாவட்டத்திற்குத் தற்போது கிடைக்கும் கனமழை எதிர்வரும் 29ஆம் திகதி வரை தொடரும் வாய்ப்புள்ளது. ஆனால், மழை இடைவெளி கிடைக்கும் வாய்ப்புள்ளது. இந்த மழை இடைவெளி வெள்ள நீர் வழிந்தோட உதவும் என நம்புகிறேன். ஆனாலும், மன்னார் நகரம், தாழ்வுபாடு, எழுத்தூர், பெரிய கமம், உப்புக்குளம், பள்ளிமுனை, செல்வாநகர், எமில்நகர் போன்ற தாழ்நிலப் பகுதிகளிலுள்ள மக்கள் எதிர்வரும் 29ஆம் திகதி வரை அவதானமாகவிருப்பது அவசியம். அத்துடன் எதிர்வரும் 6ஆம் திகதி அல்லது 7ஆம் திகதி மீண்டுமொரு தாழமுக்கம் வங்காள விரிகுடாவில் உருவாகும். நவம்பர் மாதத்தில் மூன்று தாழமுக்க நிகழ்வுகள் தோன்றும் வாய்ப்புள்ளது. அத்துடன் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, நவம்பர் மாதத்தின் 18 நாள்கள் மழை நாட்களாக அமையக்கூடும் - என்றார். (அ-ம-66-555)


## வேலையாட்கள் தேவை

| | | |
|---|---|---|
| ➤ மேசன் | - | Rs.3000.00 |
| ➤ மேசன் உதவியாளர் | - | Rs.2000.00-2500.00 |
| ➤ வெல்டர் | - | Rs.3000.00 |
| ➤ வெல்டர உதவியாளர் | - | Rs.2000.00 |
| ➤ வயறிங் | - | Rs.2500.00-3000.00 |
| ➤ பிளமிங் | - | Rs.2500.00-3000.00 |
| ➤ தச்சு வேலை(அனுபவமுள்ளவர்கள்-) | | Rs.2500.00-3000.00 |

தினசரி சம்பளம் வழங்கப்படும்
(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்)
(காலை 8.00- மாலை 5.30 வரை) யாழ்ப்பாணம்
(CS 1695)-1

தொடர்பு: 077 724 5399

## வேலையாட்கள் தேவை்


1. தொழிநுட்ப உத்தியோகத்தர் (TO)
   HND or NCT-Civil
2. கணிய அளவையியலாளர் (QS)
   HND or NCT QS
3. உதவி கணிய அளவையியலாளர் (AQS)
4. கணக்காளர் (Accountant)
5. கணக்கு உதவியாளர் (Assistant Accountant)

சுயவிபரக்கோவையை Whatsapp/Email மூலம் அனுப்பி வைக்கவும்
077 724 5399 (WhatsApp)
dreambuild2024@hotmail.com
யாழ்ப்பாணம்.


## இந்திய...

கைதான மீனவர்கள் விசாரணைகளின் பின்னர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போதே விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

# மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 07 . 1938

மறைவு 24 . 10 . 2024

## கனகசபை பாலகிருஷ்ணபிள்ளை
## (செல்வரத்தினம்)

(முன்னாள் விற்பனை பிரதிநிதி JCS (Ltd) யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தை பிறப்பிடமாகவும் இல.402, கோவில் வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை பாலகிருஷ்ணபிள்ளை (செல்வரத்தினம்) நேற்றுமுன்தினம் (24.10.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - இராஜலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சறோஜினிதேவியின் (ரோசா) அன்புக் கணவரும், பாலகுமார் (ஜேர்மனி), பாலவதனி (ஆசிரியர் - யா / இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயசீலனின் (ஜேர்மனி) சிறிய தந்தையும், கலாநிதி (ஜேர்மன்), வாகினி (ஜேர்மன்), நிகேதன் (ஆசிரியர் யா/ நவாலி ஸ்தான அ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சிவசக்திவேல் மற்றும் கைலைநாதன் (கனடா), காலஞ்சென்ற பவானிஅம்மா (லண்டன்), ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற உலகேஸ்வரி மற்றும் குலராணி, காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம், கமலாசினிதேவி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற கனகசபை மற்றும் நற்குணம் ஆகியோரின் சகலனும், அத்திரிஜா, ஆகாஸ் (ஜேர்மனி), தாராகா, தாரணி (ஜேர்மனி), தபிஷன், தர்மிஜா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.10.2024) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

402, கோவில் வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்
077 481 9738
021 222 1659

(cs.56531) (N-1)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் திட்டமிடல் கிளையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக (விவசாயம்) கடமையாற்றும் திரு.க.சுதர்சன் அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் கந்தசாமி காந்தி**

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு 08.04.1950 உதிர்வு 24.10.2024

*பிரிவின் துயரில்.....*
பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்
உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம், வேலணை.

# மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 10 . 1953

மறைவு 24 . 10 . 2024

## பிறேமகுமாரி கலைநாதன்
## (பிறேமா ரீச்சர்)

(ஓய்வுநிலை விஞ்ஞான ஆசிரியை -
புங்குடுதீவு மகாவித்தியாலயம், யாழ். இந்து மகளிர் கல்லூரி)

புங்குடுதீவு 1 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ் - கந்தர்மடம், கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட பிறேமகுமாரி கலைநாதன் நேற்றுமுன்தினம் (24.10.2024) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் (அதிபர்) - தர்மலெட்சுமி (ஆசிரியை) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான நயினாதீவு வர்த்தகர் நல்லையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், கலைநாதன் (ஓய்வுபெற்ற அதிபர் - புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகாவித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும், ரூபதாரணி (ஆசிரியை, கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம்), பிரணவரூபன் (பொறியியலாளர் - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், போல் பிரியம்பிள்ளை (Digital Marketer), வேணுஜா (ஆசிரியை - லண்டன்) ஆகியோரின் ஆருயிர் மாமியாரும், பார்கவியின் (லண்டன்) அன்பு அப்பம்மாவும், வத்சலா (கனடா), வனஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற திருலிங்கநாதன் மற்றும் லோகநாதன், சாரதாதேவி (பிரான்ஸ்), கெங்காதேவி (பிரான்ஸ்), செல்வநாதன், ஜெகநாதன் (பிரான்ஸ்) சிவபாலன் (கனடா), ரவீந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (26.10.2024) சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் பொரளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நாளை (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
கணவர் : 076 875 4653
மருமகன் : 072 614 4552

(cs.56530) (...25(N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## பொதுச்சந்தைகள், மீன் சந்தை, இறைச்சிக்கடைகள் மற்றும் வாகனத்தரிப்பிடம் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2025

கீழ்க்குறிப்பிடப்படும் பொதுச்சந்தைகள், மீன் சந்தை, இறைச்சிக்கடைகள் மற்றும் வாகனத்தரிப்பிடம் என்பன 2025ஆம் ஆண்டிற்கு (01.01.2025 - 31.12.2025) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி | : 28.10.2024 - 11.11.2024 நண்பகல் 12.00 மணி வரை |
| கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி | : 11.11.2024 பி.ப 02.00 மணி வரை |
| கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி | : 11.11.2024 திங்கட்கிழமை பி.ப 02.00 மணி |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் | : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர். |

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் **கேள்வியின் பெயர்** தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் **"தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்"** என்னும் முகவரிக்கு எதிர்வரும் 11.11.2024 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதுடன், உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2025 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | | |
| 1 | அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 5,000.00 | **31,000.00** |
| 2 | அச்சுவேலி பொதுச்சந்தை | - | 1,000.00 | 200,000.00 | **10,965,000.00** |
| 3 | அச்சுவேலி பொதுச்சந்தையின் உட்புற வாகன தரிப்பிடம் | - | 1,000.00 | 25,000.00 | **1,284,000.00** |
| 4 | அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 50,000.00 | **2,431,000.00** |
| 5 | அச்சுவேலி கோழி இறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 25,000.00 | **1,322,000.00** |
| 6 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | - | 1,000.00 | 10,000.00 | **255,000.00** |
| 7 | வளலாய் கோழி இறைச்சிக்கடை புதிய கட்டடம் | 1,600.00 | 1,000.00 | 10,000.00 | **330,000.00** |
| 8 | வளலாய் மாட்டிறைச்சிக்கடை புதிய கட்டடம் | 1,600.00 | 1,000.00 | 5,000.00 | **165,000.00** |
| | **புத்தூர் உப அலுவலகம்** (சுன்னாகம் வீதி, புத்தூர் - புதிய கட்டடங்கள்) | | | | |
| 9 | புத்தூர் மாட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 80,000.00 | **4,373,000.00** |
| 10 | புத்தூர் பொதுச்சந்தை | - | 1,000.00 | 20,000.00 | **943,000.00** |
| 11 | புத்தூர் கோழியிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 25,000.00 | **1,070,000.00** |
| 12 | புத்தூர் ஆட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 5,000.00 | **66,000.00** |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | | | | |
| 13 | கோப்பாய் மீன்சந்தை | - | 1,000.00 | 10,000.00 | **415,000.00** |
| 14 | கோப்பாய் மாட்டிறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 100,000.00 | **6,160,000.00** |
| 15 | கோப்பாய் கோழியிறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 15,000.00 | **572,000.00** |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | | | | |
| 16 | உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 80,000.00 | **4,645,000.00** |
| 17 | உரும்பிராய் மத்திய சந்தை | 2,250.00 | 1,000.00 | 30,000.00 | **1,627,000.00** |
| 18 | உரும்பிராய் கோழி இறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 15,000.00 | **789,000.00** |
| 19 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 5,000.00 | **31,000.00** |

01. சந்தையிலிருந்து 1/2 கி.மீற்றர் சுற்றாடலில் மீன், இறைச்சி, மரக்கறி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
02. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையுடன் அதன் நிழற் படப்பிரதியையும் பிரதேச கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது வங்கிக்கணக்கு புத்தகப்பிரதியையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
03. கேள்விப்படிவக்கட்டணம் கேள்வித்தொகை மாத வாடகை என்பவற்றுக்கு காலத்துக்குக்காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரி செலுத்தப்படவேண்டும். அத்துடன் விலை மதிப்பீட்டுத்திணைக் களத்தினால் மாதாந்த வாடகை மீள்மதிப்பீடு செய்யப்படும் போது மதிப்பீடு செய்யப்படும் தொகை செலுத்தப்படல் வேண்டும்.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப் படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
05. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
06. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அவரது ஒரு பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
07. சந்தையை குத்தகைக்கு எடுப்பவர்களால் உற்பத்தியாளர்களினால் கொண்டு வரப்படும் உற்பத்திப் பொருட்களுக்கு 4% வரி அறவிடப்படல் வேண்டும். பொதுச்சந்தையில் கழிவு நடைமுறை, தரகுக்கட்டண அறவீடு என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.
08. கேள்வி கோரும் ஒவ்வொரு கேள்விப் பத்திரங்களுக்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும், மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமும் செலுத்தப்படவேண்டும்.
09. வாகனத்தரிப்பிடம் குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக எதனையும் அறவிடக்கூடாது.
10. சபையின் அச்சுவேலி கொல்களத்தில் அல்லது சபையினால் அனுமதி வழங்கப்படும் கொல்களத்தில் ஆடு, மாடுகளை அறுப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.
11. கடைகளில் இறைச்சிகளின் விலைகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

**தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**
**2024.10.26**

(CR/43478) J-1

# நெடுந்தீவு பிரதேச செயலராக கிருஷ்ணவதனா நியமனம்!



யாழ்ப்பாணம், ஒக். 26
நெடுந்தீவு பிரதேச செயலராக சங்கானை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய திருமதி கிருஷ்ணவதனா செந்தூரன் நியமனம் பெற்றுள்ளார். பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மூலம் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ம-125)

# டெங்குச் சூழல்; வழக்குப் பதிவு



யாழ்ப்பாணம், ஒக்.26
வண்ணார்ப்பண்ணையில் மேற்கொள்ளப்பட்ட டெங்குக் கட்டுப்பாட்டு நட வடிக்கையின்போது 6 குடியிருப்பு மற்றும் ஒரு தனியார் மருத்துவ மனை
ஆகியன டெங்கு பரவும் சூழலுடன் அவதானிக் கப்பட்டதையடுத்து அவற் றுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
கடந்த வியாழக்கிழமை டெங்குப் பரிசோதனைமேற்கொண்டபோதே டெங்கு நுளம்புக் குடம்பிகளுடன் அவை அடை யாளம் காணப்பட்டன. மேலும் சுகாதார வசதிகள் இன்றி காணப்பட்ட 30 குடியிருப்புகளுக்கு சிவப்பு அறிவித்தலும் வழங்கப்பட்டுள்ளது. மழைக்காலம் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து மாநகரப் பிரதேசங்களில் நுளம்புக்கட்டுப்பாடு தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ச-25, 17)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 25
தந்தை செல்வாவின் 125ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு, 'எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் தமிழ் தேசியவாதமும்' எனும் ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய நூல் வெளியீடு யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஸ்ரீமான் சாய் முரளி தலைமையில் யாழ். தந்தை செல்வா கலையரங்கில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.
நூல் மதிப்பீட்டு உரைகளை கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீட பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் தமிழிலும் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக அரசறிவியல் துறை பேராசிரியர் உபுல் அபேரத்ன ஆங்கிலத்திலும் நிகழ்த்தவுள்ளனர். (ம-45)

# வேட்பாளர்களிடம் வினவலாம்

யாழ்ப்பாணம், ஒக். 26
'எமது எம்.பி. எமது குரல்' எனும் சர்வ கட்சி வேட்பாளர்களை உள்ளடக்கிய நிகழ்வொன்று, இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.
யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கத்தில் பிற்பகல் 2 மணிமுதல் இந்த நிகழ்வு நடைபெறவுள்ள நிலையில், ஆர்வமுள்ளவர்கள் இதில் கலந்துகொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ம)

# வாகை மரத்தை சாய்த்த அலுவலர்கள்

கொடிகாமம், ஒக். 26
எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் மக்களால் நடுகை செய்யப்பட்ட பொன்வாகை மரத்தை விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் அமைக்கும் கட்டடத்துக்காக வெட்டி சாய்க்கப்பட்டுள்ளது. மரங்களைப் பாதுகாக்க வேண்டும் என விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய அலுவலர்களே மரத்தை வெட்டியமையையிட்டு அந்தப் பகுதி மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். (ரி-159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை – கட்டைக்காடு பேருந்து சேவை சீரில்லை!

## பயணிகள் விசனம்

யாழ்ப்பாணம், ஒக்.26

கட்டைக்காடு – பருத்தித்துறை பேருந்து சேவை சீரின்மையால் மாணவர்கள், நோயாளர்கள் எனப் பலரும் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காட்டுப் பகுதியில் இருந்து பருத்தித்துறை நகருக்குக் காலையில் புறப்படும் பேருந்து பல தடவைகள் பழுது காரணமாக தடைப் படுகின்றது. சிலவேளைகளில் பாதி வழியிலேயே பழுதடைந்து நிற்கின்றமையும் நீண்ட காலமாக தொடர்கதையாக இடம்பெறுகிறது.

இதனால் வடமராட்சி கிழக்கிலி ருந்து பருத்தித்துறை நகரப்புற பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள், மருத்துவமனைக்குச் செல்லும் நோயாளர்கள் எனப் பல தரப்பினரும் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

பேருந்து பழுது எனில் வேறு பேருந்தை ஒழுங்கு செய்து சேவையைத் தொடர்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டியது பருத்தித்துறை போக்குவரத்து சாலையினரின் பொறுப்பாகும். எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் பயணிகள் நலன்கருதி பேருந்து சேவை சீராக இடம்பெறுவதை உறுதிசெய்ய வேண்டும் என்றும் அந்தப் பகுதி மக்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-100)

# யாழ்ப்பாணத்தில் உருவாகும் முழு நீளத்திரைப்படம் 'பொம்மலாட்டம்'

யாழ்ப்பாணம், ஒக். 26

அதிகளவான யாழ்ப்பாணக் கலைஞர்களின் பங்கேற்புடன் முழு நீளத் திரைப்படமான 'பொம்மலாட்டம்' யாழ்ப்பாணத்தில் உருவாகிவருவதாக, திரைப் படக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இன்பம் அரன்யாவின் ஆரணி படைப்பகம் இந்தத் திரைப் படத்தைத் தயாரிக்கிறது.

இயக்குநர் சசிகரன் திரைப் படம் தொடர்பில் தெரிவித்ததாவது;

'பொம்மலாட்டம்' ஓர் உள்ளூர் கதைக்களத்தை அடிப்படையாகக் கொண்ட திரைப்படம். இதன் முன்னோட்டம் எதிர் வரும் நவம்பர் 8ஆம் திகதி வெளியிடப்படவுள்ள அதேவேளை - டிசெம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் திரையிடப் பட்டு பின்பு ஏனைய மாவட்டங்களில் வெளியிடப்படும்.

மேலும் இந்தப் படத்தில் சிறுவர்கள் பிரதான பாத்திரம் ஏற்று நடித்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் தற்போது நடைபெறும் சம்பவங்கள் குறித்து குறிப்பாக சிறுவர்களின் கல்விப் பாரம் தொடர்பாக 'பொம்மலாட்டம்' பேசுவதாகக் குறிப்பிட்டார். (ஒ-20)



# நூல் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.26

இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெயசங்கரால் கையளிக்கப்பட்ட நூல் யாழ். இந்தியத் துணைத்தூதுவரால் வடக்கு ஆளுநர் நா. வேதநாயகனிடம் கடந்த வாரம் கையளிக்கப்பட்டது.

"ஒரு சிறந்த நாளைக்கான பிணைப்புகளை வலுப்படுத்துதல்" எனும் ஹிந்தி மொழியில் உருவாக்கப்பட்ட நூல் தமிழ்மொழியில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு கையளிக்கும் நிகழ்வு யாழ். மருதடி வீதியிலுள்ள இந்திய துணைத்தூதர அலுவலகத்தில் உதவி துணைத்தூதுவர் சாய் முரளி தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்து கொண்டார். (ரி-27)

நல்லூர்க் கந்தன் திருமண சேவை

என் அன்பார்ந்த உறவுகளுக்கு இனிய தீபாவளி வாழ்த்துக்கள் எம்மிடம் பல்லாயிரக் கணக்கான மணமகன்கள் மணமகள்கள் உண்டு நீங்கள் விரும்பியவாறு தெரிவு செய்யலாம். குறுகிய காலத்திற்குள் திருமணம் நிறைவேற்றி தரப்படும்.

தொடர்புகளுக்கு:
வி.ஜெயந்தி - 077 973 3183
(CS 1697) V-1

சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்




திரு. சுப்பிரமணியம்
இராஜேஸ்வரன்
(அரசியல் விஞ்ஞானப் பட்டதாரி - SLTS - I

அறுபதாவது அகவையில்
மணிவிழா காணும் நாயகனே

32 வருட தன்னலமற்ற
சேவையினைத் தன்னிகரில்லா
வழங்கிய முதல்வனே கல்விப்பணி
மட்டுமல்ல சமூகப் பணியை
அறத்துடனே தந்த உயர்ந்த
உள்ளமே வரணி மண்ணில்
ஆற்றிய மாண்புறு சேவையினை
மனதார வாழ்த்துகின்றோம்.
உள்ளத்தில் உறுதியும்
எண்ணத்தில் தெளிவும்
பார்வையில் பரிவும் கடமையில்
நேர்மையும் உடையவரே பலரை
உருவாக்கிய படைப்பாளியே
துயரங்கள் சூழ்ந்த போதும்
துவண்டு போகவில்லை
துள்ளித்திரியும் ஆற்றல்
தூங்கிடவில்லை.
32 வருடங்கள் திறம்படப்
பணியாற்றி இன்றைய தினம் மணி
விழாவில் ஓய்வுபெறுகின்ற திரு.
சுப்பிரமணியம் இராஜேஸ்வரன்
அவர்களின் சேவையினைப்
பாராட்டுவதுடன் மணிவிழா
வாழ்த்துக்களையும் தெரிவித்து
ஓய்வுகாலம் சிறக்க
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
திரு.வ.கனகரத்தினம் (குடும்பம்)
(ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் -
வரணி)
(cs56486) N-1

காணி விற்பனைக்கு

முருகமூர்த்தி வீதி,
வண்ணார் பண்ணை
முனிசிப்பல் எல்லைக்குட்பட்ட
2 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.
077 846 0804
(CS/56533) J-1

காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகர் பகுதியில் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இருந்து ஏறத்தாழ 100m தொலைவில் 4.5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. வர்த்தகர்களுக்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த நிலப்பரப்பாகும். முகவர்கள் தேவையில்லை.
பி.ப. 4.00 மணிக்குப் பின் தொடர்புகளை மேற்கொள்ளலாம்.
தொடர்பு:- 075 777 1885
(CR43481) J-1

THE ROYAL COLLEGE OF JAFFNA

தனியார் கல்வி நிறுவனம் சங்கானை.
O/L,A/L வகுப்புகள் நடைபெறுகின்றன. தமிழ்-கரன். ஆங்கிலம்-விக்னேஸ். வரலாறு-லக்ஷன். மீடியா-பிரஷாத். குபேரன் கட்டட மாடி. சங்கானை.
தொடர்புகளுக்கு:
077 675 1649

பெயர் மாற்றம்

கொம்பலாட்டி சமரபாகு எனும் முகவரியை
சேர்ந்த இராசா மயிலம்மா என்கிற எனது முதற்
பெயரினை இன்று முதல் இராசா மாசிலாமணி
என மாற்றம் செய்வதோடு சகல
ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பம்
இடுவேன் என இலங்கை சனநாயக சோசலிச
குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.
இராசா மாசிலாமணி
(CS/28735) J-1

CHUNDIKULI GIRLS' COLLEGE
JAFFNA

New Admissions - 2025
English Medium Nursery

- For 3+ classes (Girls only)
- Only limited vacancies

Age:- Born on or after 01.02.2021 and before 31.01.2022

- Application forms (limited number) will be available at the College office from 1st November 2024.
- Applications close on 11th November 2024.
- Interviews will be held soon after the submission of the applications.

Principal
(ccr43399) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்களைக்...

புத்தளத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரையிலேயே, ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டுமக்கள் துணிந்துவிட்டனர். அவர்கள் இலங்கை அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்துவது என்று தீர்க்கமாகத் தீர்மானித்திருக்கின்றனர். உலகிலேயே மிகச் சிறிய அமைச்சரவையைக் கொண்டு தான் தற்போதைய கடமைகளை முன்னெடுத்து வருகின்றோம். உங்களுக்கு ஏதேனும் குறைபாடுகள் உணரப்பட்டுள்ளதா? நிச்சயமாக இல்லை. பொதுத்தேர்தலின் பின்னரும் இவ்வாறுதான். 25க்கும் குறைவான அமைச்சர்கள் கொண்ட அமைச்சரவையை அமைத்து பணிகள் வினைத்திறனுடன் மேற்கொள்ளப்படும்.
அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க பணத்தை ஒதுக்கியதாக முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அவர் ஒதுக்கியிராவிட்டாலும் எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் நாங்கள் அதற்கு அவசியமான நிதியை ஒதுக்கீடு செய்வோம். முன்னாள் ஜனாதிபதி தோல்விகண்ட பின்னர் எம்மை அங்கு மிங்கும் கிள்ளிக் கொண்டிருக்காமல் வீட்டில் இருக்கவேண்டுமென நாங்கள் ஞாபகப்படுத்துகிறோம். ஆனால் அவர்கள் ஏதாவது பிரச்சினையையோ அல்லது பொய்களையோ உருவாக்கி மீண்டும் அதிகாரத்தைக் கையகப்படுத்திக் கொள்ள முயற்சிசெய்து வருகிறார்கள்.
எங்கள் அரசாங்கம் மூன்று மாதங்களில் அல்லது ஆறு மாதங்களில் வீழ்ந்துவிடுமெனவும் கூறத் தொடங்கியுள்ளனர். நாங்கள் இந்த நாட்டைச் சீராக்கியே தீருவோமென்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். இந்த நாட்டை அனைத்துவிதமான சாபக்கேடுகளில் இருந்தும் மீட்காமல் ஓயப்போவதில்லை - என்றார். (அ-ம-இ)

## உறவுகளுக்கு...

மேற்கொண்டுள்ள ஜூலி சங், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களைச் சந்தித்து, அவர்களது நிலைப்பாடுகளையும், கோரிக்கைகளையும் கேட்டறிந்தார். இதன் பின்னரே, காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது? என்று அறிவதற்கான உரிமை அவர்களைச் சார்ந்தோருக்கு உள்ளதாக ஜூலி சங் கூறியுள்ளார். வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினருடனான சந்திப்பை அடுத்து, அவர்களது கதைகளால் தான் மிகுந்த துயருற்றிருப்பதாகவும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கூறியுள்ளார். வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரைத் தேடிவரும் குடும்பங்களின் கதைகள் வலி மிகுந்தவை என்றும் ஜூலி சங் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம)

## கல்விக்குச்...

இதன்படி ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெறும் 1.5 வீதத்தை மாத்திரமே இலங்கை கல்விக்காகச் செலவிடுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹெய்ட்டி மற்றும் லாவோஸ் ஆகிய நாடுகளே கல்விக்காக மிகக்குறைந்த தொகையைச்செலவிடும் நாடுகளின் பட்டியலில் முதலிரு இடங்களிலும் உள்ளன. அத்துடன், உலகளவில் தமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெருமளவு நிதியை கல்விக்குச் செலவிடும் அபிவிருத்தி அடையாத நாடுகளின் பட்டியலில் சியராலியோன், மாலி மற்றும் உகாண்டா நாடுகள் தரப்படுத்தப்பட்டுள்ளன. இவை தமது ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 வீதத்துக்கும் அதிகமான தொகையை கல்விக்குச் செலவிடுகின்றன. (அ-ம)

## மின்கட்டணத்...

தொடர்பான விவரங்கள் வெளியிடப்படுமென இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது. இதேவேளை - மின்கட்டணத்தைக் குறைப்பதற்காக இந்த ஆண்டில் மின்சாரசபையினால் யோசனை முன்வைக்கப்படும் மூன்றாவது சந்தர்ப்பம் இதுவாகும். (அ-ம-66)

## சொந்தமண்ணில்...

யுத்தம் காரணமாக 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் காங்கேசன்துறைப் பகுதியிலிருந்து பொதுமக்கள் வெளியேறியதையடுத்துக் காங்கேசன்துறை இராணுவ உயர்ப் பாதுகாப்பு வலயமாக இருந்தமையால் மாவிட்டபுரம் பகுதியில் தற்காலிகமாக அஞ்சல் அலுவலகம் இயங்கி வந்தது. இந்த நிலையில் தற்போது மீண்டும் காங்கேசன்துறைப் பகுதியில் குறித்த அஞ்சல் அலுவலகம் தனது சேவையை ஆரம்பித்துள்ளது.
காங்கேசன்துறை - பருத்தித்துறை வீதியில் சொந்தக் காணியில் இந்த அஞ்சல் அலுவலகம் முதலில் அமைந்திருந்தது. ஆனால், மீண்டும் அந்தக் காணியில் இயங்குவதற்குப் பெரும் நிதிச்செலவு ஏற்படும் என்பதால் தற்காலிகமாகத் தனியார் கட்டடம் ஒன்றிலேயே குறித்த அஞ்சல் அலுவலகம் தனது சேவையை ஆரம்பித்துள்ளது. (அ-ம-66)

## திடீர்...

அந்த இளைஞனுக்கு கடந்த சில வருடங்களுக்கு முன்னர் மின்சாரம் தாக்கியுள்ளது. அதற்கு தீவிர சிகிச்சையைப் பெற்று மீண்ட அவர், அதன் பின்னர் அவ்வப்போது வாந்தி எடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்துள்ளார். நேற்று முன்தினம் அதிகாலை திடீர் சுகவீனமுற்று இரத்த வாந்தி எடுத்துள்ளார். அவர் உடனடியாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக் காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சையின்போது நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-66)

## போஸ்டர்...

யானையில் இருந்து பாதுகாத்துக்கொள்வதற்காக அமைக்கப்பட்ட, மின்வேலியில் அகப்பட்டே அவர் உயிரிழந்துள்ளார். காசிலிங்கம் லங்காதீபன் (வயது-45) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். ஒட்டுசுட்டான் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-19)

# மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 10 . 1939



மறைவு
25 . 10 . 2024

## கணபதிப்பிள்ளை இராசபூபதி

காரைநகர், பாலாலோடை, களபூமியை பிறப்பிடமாகவும் தாவடி வடக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராசபூபதி அவர்கள் நேற்று (25.10.2024) வெள்ளிக்கிழமை இறையடி சேர்ந்தார்
அன்னார் காலஞ்சென்ற கந்தையா நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சின்னம்மாவின் மருமகளும் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், கனகரத்தினம், கனகலிங்கம் மற்றும் தியாகராஜா, தேவராசா, தங்கராசா இராஜேஸ்வரி, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், மீனாட்சி வள்ளியம்மை, கந்தையா மற்றும் கனகரத்தினம் ஆகியோரின் மைத்துனியும், சிவசுப்பிரமணியம், நந்தபாலன், ஞானமூர்த்தி, நாகேஸ்வரி, ரவிச்சந்திரன், தவச்செல்வன், யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் கலைச்செல்வி, ஜெயகலா, கொலஸ்ரிகா, சிவானந்தன், வதனி, திருவழகி, இளங்கோ ஆகியோரின் மாமியாரும் கோகுலன்-கஜீபனா, கோபி-தேவிகா, பிரசாலினி-சங்கர், துயவன், அறிவரசன், ஜனுசியா-கபில், லக்ஷிகா, கேசிகா, பிரகாஸ்-கியூரி, அஜித்-சுஜித்தா, விஜித்-சாதனா, மயூரி-பார்த்தீபன், நிசாந்தன், சுலக்ஷன், விதுன்.ஜசிந்தா-நிறஞ்சன், ஜதுசா-பவித்திரன், ஜதுகுலன், ஜதுசிகா, ஜதுசியன், பிரணவன், நிதின் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்
பிரணிகா, கரணிகா, கருணிகா இனியன், கணியா, லிபிக்கா, டிலான், சபிந்தா, கவின், பிரவீன், கிஷாரா, ஆகியோரின் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.10.2024) அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 07.00 மணியளவில் காரைநகர் தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 088 6126, 076 347 0175

தகவல்:
குடும்பத்தினர்.
(CS 1699)


# வேலையாட்கள் தேவை

பலசரக்கு கடைக்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

- ஆரம்ப சம்பளம் நாள் ஒன்றிற்கு ஆண் - 3000/- - 3500/-
- முன்அனுபவமுள்ள பெண் சிட்டை எழுதுநர் - 30000/- - 45000/-
- பொதிசெய்யும் பெண்கள் - 30000/- - 45000/-

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் தேவை.

தொடர்புக்கு:- 076 184 4954

(CS/56539) J-1

# காணி விற்பனைக்கு உண்டு

- யாழ்ப்பாணம் கைதடியில் 18 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு A9 வீதி முகப்புடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00
- தரகர் தேவையில்லை
- 20 அடி பாதையுடன்

தொடர்புகளுக்கு:
070 168 3354, 070 668 3354

# காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் உரும்பிராய் சிவகுல வீதியில் 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- உரும்பிராய் சந்தி 300 மீற்றர் தூரம்
- நல்ல சூழல் குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- தரகர் தேவையில்லை
- மருதனார் மடம் உரும்பிராய் செல்லும் காப்பற் வீதி 150 மீற்றர் தூரம்.

தொடர்புகளுக்கு: 077 4683 354
077 2880 152

(CS 1696) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயிகளுக்கு



சீனாவில்(China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட 4 ஸ்ரோக் (4 STROKE) பவர் ஸ்பிறேயர் (Power sprayer) 20 லீற்றர். மெல்லிய சத்தத்துடன் நிம்மதியாக வேலை செய்ய. இலங்கையில் முதன் முறையாக அறிமுகப்படுத்துகின்றோம்.

அத்துடன்



இந்தோனேசியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட விவசாய மருந்து தெளிகருவி (Sprayer) 17 லீற்றர். சில்வர். பிளாஸ்டிக்காலானதும் பற்றறி இணைக்கப்பட்டதும் மற்றும் இணைக்கப்படாததும் விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் (FMRC) அங்கீகாரம் அளிக்கப்பட்டதுமான தெளிகருவி இப்பொழுது எம்மிடம் உத்தரவாதத்துடன்.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

**ஆர்க். என். கம்பனி**

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline : 071 535 7799/ 071 973 9917

## வாடகைக்கு

மல்லாகம் நீதிமன்றத்திலிருந்து 500m தூரத்தில் ஸ்ரீமுருகன் களஞ்சியத்திற்கு முன்புறமாக சகல வசதிகளுடன் கூடிய இரண்டு மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு. வங்கிகள், நிறுவனங்கள் நடாத்துவதற்கு உகந்தது.

**076 106 3291**

(CS/56531) 1-1

## காணி விற்பனைக்கு

கந்தர்மடச் சந்திக்கும் Hindu Ladies College இற்கும் இடையில் 1 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- வீதியில் இருந்து இரண்டாவது காணி
- சுற்று மதில்
- குழாய்க் கிணறு

தொடர்புகளுக்கு:-

**076 772 5781, 075 068 4622**

(CS/29046) 1-1

## செவிப்புலன் கருவிகள் விற்பனைக்கு



- செவிப்புலன் குறைபாட்டினால் கவலையா ? கவலை வேண்டாம்
- ரூபாய் 9999/= மட்டுமே செலுத்தி செவிப்புலன் கருவி ஒன்றினை உங்களுடையதாக்கிக்கொள்ளுங்கள்
- சென்ற முறை தவற விட்டவர்களுக்கு மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்
- உங்கள் வீட்டிற்கே வந்து பரிசோதித்து வழங்குகின்றோம்
- முன்பதிவுக்கு இன்றே அழையுங்கள்

**077 434 6245**

(cs 56523) N-1

விரையுங்கள் குறைந்த கையிருப்புகள் மாத்திரமே

## வேலை வாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் நிறுவனத்திற்கு கீழ் குறிப்பிடப்பட்ட பணிகளுக்கு ஆட்கள் தேவை

கிளிநொச்சி மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இருந்து வருபவர்களுக்கு உணவு. தங்குமிடம் வழங்கப்படும்.

1) விற்பனை பிரதிநிதி :-கிளிநொச்சி. முல்லைத்தீவு. வவுனியா. மன்னார் (ஆண்)
2) அலுவலக முகாமையாளர்:-கணினி அறிவுடையவர்கள் (ஆண்.பெண்)
3) விற்பனையாளர்கள் :- ஆண்.பெண்
4) கணக்குப் பதிவாளர் :- ஆண்.பெண் (கணினி அறிவுடையவர்கள்)

மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு தகுதி வாய்ந்தவர்கள் கீழ் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்களிடம் உள்ள தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

1. சுயவிபரக் கோவை
2. குடும்ப பங்கீட்டு அட்டை
3. பிறப்புச் சான்றிதழ்
4. தேசிய அடையாள அட்டை
5. G.S குணநல சான்றிதழ்

(CS 43475) P-1

தொடர்பு: **077 743 5265**

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
**V2 Travels**
**0768226244**

## மரண அறிவித்தல்

தாய்மடியில் 26 . 01 . 1955



சிவனடியில் 24 . 10 . 2024

### கனகாம்பிகை நடராஜா

நாவலடி புலோலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கனகாம்பிகை நடராஜா நேற்றுமுன்தினம் (24.10.2024) வியாழக்கிழமை சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், நடராஜா அவர்களின் அன்பு மனைவியும், நிரஞ்சினி VTA (போதனாசிரியர்), சாளினி (விரிவுரையாளர். வவுனியா பல்கலைக்கழகம்), மதுநிலவன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிரிஷாந் (ஆசிரியர்), கோபிசங்கர் (களஞ்சிய பொறுப்பாளர் இ.போ.ச) ஆகியோரின் அன்பு மாமியாரும், யுதிஷ்ரிரனின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான குலவீரசிங்கம், மகேஸ்வரி, இராஜேஸ்வரி, மங்களேஸ்வரி மற்றும் செல்வநாயகம் (கனடா), செல்வராணி (லண்டன்), சிவபாலன் (கொழும்பு), பரமேஸ்வரி, தெய்வநாயகி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (28.10.2024) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் தற்காலிகமுகவரியான கூவில் வீதி, புலோலி தென்மேற்கில் உள்ள வதிவிடத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூவில் வீதி, தென்மேற்கு
புலோலி மேற்கு.

தகவல்:
**குடும்பத்தினர்**

(CS/56537) N-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 11 . 1936



மறைவு 25 . 10 . 2024

### நல்லையா கனகம்மா

காளிகோவிலடி தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா கனகம்மா நேற்று (25.10.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-தங்கம்மா தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா-அன்னம்மா தம்பதியின் அன்பு மருமகளும், அமரர் நல்லையாவின் அன்பு மனைவியும், சகுந்தலாதேவி, சிவானந்தம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், திருச்செல்வம் (அமரர்), மல்லிகா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பொன்னுத்துரை (அமரர்), அழகம்மா, பூமணி, யோகம்மா, புஸ்பராணி, அமரர் கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,யோகம்மா, சரோஜினிதேவி, ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுதர்சன் (லண்டன்), றஜித்தா (லண்டன்), முகுந்தன், ராகவன் (லண்டன்), அருண் (கனடா), ஆரபி (கனடா), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அஞ்சனா, பிரணவராம், பிரஜித்ராம், அபிராம், அக்ஷயா, அஷ்விகா, ஆருத்ரா, அஸ்விகன், அபிசனா, சஸ்வின், அஸ்ரீனா, நபேயா, சியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்,

தாவடி வடக்கு,
கொக்குவில்

தகவல்:
**குடும்பத்தினர்**
077 858 3835

(CS 1693)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.